# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனமும் (கூட்டிணைத்தல்)

**த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனமும் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விக்டர் அந்தனீ அவர்களால் 2011, மே மாதம் 04 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[ *105 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

# த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனமும் (கூட்டிணைத்தல்)

## த. மு. தசநாயக்க சமூக சேகைளும் அறக்கட்டளை தர்ம ஸ்தாபனமும் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

''த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்ம ஸ்தாபனமும்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஸ்தாபனமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட ஸ்தாபனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட ஸ்தாபனம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனமும் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்ம ஸ்தாபனமும் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "ஸ்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனத்தின்'' தற்போதைய உறுப்பினராக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனமும்'' எனும் பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டு

2-PL 005621 - 70 (2011/03)

மென்பதோடு, அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கை மக்களின் வறுமை நிலையை ஒழித்துக்கட்ட அவசியமான அபிவிருத்தியினூடாக மக்களை பேணி வளர்த்தல் ;

(ஆ) மனித வர்க்கம் எதிர்நோக்குகின்ற உளரீதியானதும் மனவெழுச்சிரீதியானதுமான துன்பங்களுக்குத் தீர்வாக ஆறுதல் அளிக்கவல்ல கற்பித்தல்களை மேம்படுத்துவதன் மூலமாக அவர்கள் மத்தியில் நிலவுகின்ற விரக்தி நிலையைக் குறைத்து ஆறுதல் மிக்க வாழ்க்கை முறையின்பால் ஆற்றுப்படுத்தல் ;

(இ) சிறுவர், இளைஞர், வயோதிபர் ஆகிய எந்த வயதுப் பிரிவினைச் சேர்ந்தவரும் புத்த தர்மத்தினூடாக பெறுகின்ற வாழ்க்கைப் பேரறிவினை விளங்கிக்கொண்டு மனித சமுதாயத்தின் பரவலான பிரதிநிதித்துவம் தோன்றக்கூடிய வகையில் ஒத்துழைப்பினையும் சகவாழ்வினையும் விருத்திசெய்து குறுகியவாத பேதங்களிலிருந்து இலங்கை மக்களை மீட்டெடுத்தல் ;

(ஈ) இன, மத பேதமற்ற நன்னெறிமிக்க சமூகத்திற்கு வழிசமைக்கின்ற சமூக ஆளுமையை இனங்கண்டு குடும்பத்தையும் சமூகத்தையும் தன்னிறைவுகொண்ட அலகாக மாற்றுதல் ;

(உ) வறுமையால் வாடுகின்ற பிள்ளைகளின் உடல் மற்றும் உளரீதியான அபிவிருத்திக்காக நிதி ரீதியானதும் பௌதீக ரீதியானதுமான ஏற்பாடுகளை வழங்கி அவர்களின் ஆளுமை விருத்திக்காக உச்சமட்ட பங்களிப்பினை வழங்குதல் ;

(ஊ) விவசாய மற்றும் பொருளாதார மூலோபாயங்களைப் பயனுற பேணிவருவதற்கான கல்விக் கோட்பாடு மற்றும் பிரயோக அறிவினை அவசியமானோருக்கு வழங்குதல் ;

(எ) பாடசாலையில் கற்கும் பிள்ளைகளின் எழுத்தறிவினை விருத்திசெய்து அவர்கள் தோற்றுகின்ற பகிரங்க பரீட்சைகளுக்காக இலங்கைப் புலமைசாலிகளின் வழிகாட்டல்களையும் மேலதிக உதவிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கேதுவாக அப்பிள்ளைகளை ஆற்றுப் படுத்த அவசியமான பௌதீக மற்றும் மனித வளங் களை மேம்படுத்தல் ;

(ஏ) சுயதொழில் வாழ்வாதாரங்களின்பால் ஆர்வம் காட்டு கின்ற வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் அதற்கு அவசியமான தொழில்சார் பயிற்சியை, பௌதீக மற்றும் நிதிவளங்களை அளித்து குடும்பத்தில் சாதகமான பொருளாதாரப் போக்கினை கட்டியெழுப்ப உதவுதல் ;

(ஐ) மேற்படி ஸ்தாபனத்தின் நோக்கங்களுடனும் குறிக் கோள்களுடனும் ஒத்துவரத்தக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிற நிறுவனங்களுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதலும் அவசியமாகுமிடத்து வளங்களைப் பரிமாற்றிக்கொள்ளலும் அந்நிறுவனங்களுடன் கூட்டாகச் செயலாற்றுதலும் ;

(ஒ) ஸ்தாபனத்தின் நோக்கங்களை ஈடேற்றிக்கொள்ள அவசியமான நூல்கள், பருவகால சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகளை அச்சிட்டு வெளியிடுதலும் தேவைக்கேற்ப விநியோகித் தலும் ;

(ஓ) நிறைவான வாழ்க்கையைக் கழிக்க அவசியமான உடல், உள, சமூக, நன்னெறி மற்றும் அறிவு அபிவிருத்திக்காக இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியில் சம்மேளனங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் குழுமக் கற்கை செயற்பாடுகளுக்கான பூரண அனுசரணை வழங்குதலும் பேணிவருதலும் ;

(ஔ) நோயாளிகளாக வைத்தியசாலைகள் உள்ளிட்ட ஏனைய மருத்துவமனைகளில் உள்ளவர்களுக்கு உடல், உள ரீதியான ஆறுதலை ஏற்படுத்தும்பொருட்டு அந்தந்த நிறுவனங்களுக்குச் சென்று அவர்களுக்காக ஈடேற்ற வேண்டிய ஏதேனும் சேவை தேவைப்படின் அதன் பொருட்டு தாமதமின்றி முன்வருதல் ;

(க) இயற்கை அனர்த்தங்கள் உள்ளிட்ட பல்வேறு அனர்த்தங்களினால் பாதிப்படையும் இலங்கை மக்களுக்கு அவர்களின் உடல் மற்றும் உள ரீதியான மேம்பாட்டுக்காக துரிதமாக இடையீடுசெய்தலும் அவர்களை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் பொருட்டு மேற்கொள்ளவேண்டிய அத்தகைய நடவடிக்கைகளின் போது தாமதமின்றி முனைப்பான பங்களிப்பினை நல்குதலும் ;

(ங) மனிதனின் உள்ளார்ந்த சக்திகளை இனங்கண்டு அச்சக்திகளை சமூக மற்றும் தனியாள் முன்னேற்றத்தின்பால் ஈடுபடுத்துதல் பற்றிய கவனத்தைச் செலுத்தி சக்திமிக்க, திடசங்கற்பம்கொண்ட, இலக்கு சார்ந்த மக்கள் வாழ்க்கைக்கு அவசியமான உளப்பாங்குகளையும் திறன்களையும் அபிவிருத்தி செய்தன் மூலமாக ஆட்களின் தனித்தன்மையை மேம்படுத்தல் ;

(ச) மரணமடைந்த படைவீரர்களின் குடும்ப மேம்பாட்டுக்காக நலன்புரிச் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தல் மற்றும் அவர்களுக்கு அவசியமான வசதிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஞ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அவற்றில் ஏதேனுமொன்றை எய்துவதற்குத் தேவையானதும், இடைநேர்விளைவானதும், விரும்பத்தக்கதுமான எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் பணிகள் ஸ்தாபனத்தின் தலைவரான வடமேல் மாகாண சபை உறுப்பினர் இந்திராணி தசநாயக்க, செயலாளர், பொருளாளர், உபசெயலாளர்கள் இருவர் மற்றும் செயற்குழு அங்கத்தவர்கள் ஆறு பேர்களைக் கொண்ட நிர்வாக சபையினால் முகாமை செய்யப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிர்வாக சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று ஸ்தாபனத்தின் நிர்வாக சபையில் அங்கத்துவம் வகித்தவர்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

(3) தலைவராகப் பதவி வகிக்கும் இந்திராணி தசநாயக்க தனது பதவியிலிருந்து முன்கூட்டியே விலகினாலொழிய ஸ்தாபனத்தின் நிகழ்காலத் தலைவர் இந்திராணி தசநாயக்க கூட்டுத்தாபனத்தின் ஆயுட்காலத் தலைவராக பதவி வகிப்பார்.

*சொத்துக்களைச் சுவீகரித்தல், நிதிகளை முதலீடு செய்தல், கடன் பெறுதல் தொடர்பிலான கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாக :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படுத்தப்படும் காணிகளை அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கும், சுவீகரிப்பதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும், நிறுவுவதற்கும் அல்லது வேறு வகையில் பெறவும், அவற்றைக் கையுதிர்க்கவும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள், நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து கடன்களையும் (உள்நாட்டு அல்லது வெளிநாட்டு) உதவிகள் மற்றும் கொடைகளையும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்திற்குக் கட்டுப்பட்டதாகப் பெறவும் ;

(இ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், உறுதிப் பத்திரங்கள் அத்துடன் ஏனைய கொடுக்கல்வாங்கல்களை செய்யக்கூடிய சாசனங்களைத் தயாரிக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும், விற்பனை செய்யவும், விநியோகிக்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை நிருவாக சபை பொருத்தமெனக் கருதும்வகையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) சந்தாப்பணம், உதவு தொகைகள், கொடைகள், நன்கொடைகள் மற்றும் எல்லா வகையிலுமான பரிசுகளையும் கோருவதற்கும் கையேற்பதற்கும் ;

(ஊ) எவரேனும் ஆளொருவர், ஏதேனும் ஒரு கம்பனி அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் ;

(எ) ஏதேனும் நிலையான ஆதனத்திற்கு அல்லது தனிப்பட்ட ஆதனத்திற்கு ஏற்புடைய நிபந்தனைகளைப் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், நடைமுறைப் படுத்தவும், நிறைவேற்றவும், நிர்வகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களையும் சேவையாளர்களையும் நியமனஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனம் தீர்மானிக்கும் சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஊழியர்களைப் பயிற்றுவிக்கவும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறவும் நடைமுறைப்படுத்த அவசியமான அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு ஏனைய சகலவற்றையும் செய்யவும்,

கூட்டுத்தாபனம் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அமைப்பு விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும்

வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அவர்களைச் சேர்த்துக்கொள்ளல், அவர்களை விலக்குதல் அல்லது பதவிவிலகல் ;

(ஆ) நிர்வாக சபையினைத் தெரிவு செய்தல், பதவி தாங்குநர்கள் பதவிநீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் நடத்தைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் நடத்தை ;

(ஈ) நிருவாக சபையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறைகள், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அக் கூட்டங்களில் வெற்றிடங்களை நிரப்புதல் பற்றி அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அதன் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) நிர்வாக சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மை, தகைமைகள் மற்றும் தகைமையீனங்கள் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல், முகாமைசெய்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நேர்முந்திய நாளன்று அமுலில் இருந்த ஸ்தாபனத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராதவரை இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அவ்விதிகள் இப்பிரிவின் (1) ஆவது உபபிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியாக அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்திய மைக்கலாம், மாற்றலாம், அதனோடு எதனையும் சேர்க்கலாம் அல்லது அதனை நீக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் நிதியாண்டு சனவரி 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஆகும்.

(2) கூட்டுத்தாபனத்திற்காக பெறப்படுகின்ற கொடை, அன்பளிப்பு, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபை அங்கீகரிக்கும் ஒரு வங்கியில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பலிடப்படல் வேண்டும்.

ஸ்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படவேண்டியனவுமான கடன்கள்.

**8.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஸ்தாபனத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று ஸ்தாபனத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கணக்காய்வும் கணக்குகளும்.

**9.** (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கையின் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது

சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவனத்தின்பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்ற தான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனங்கள்.*

**10.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் தீர்த்த பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருப்பின் அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. எனினும் அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கையளிக்கப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் செயலாளர், தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் முன்னிலையிலன்றி கூட்டுத்தாப னத்தின் இலச்சினை எவ்விதமான சாசனத்திலும் பொறிக் கப்படலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந் தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்ப மிடுதல் எவரேனும் ஆள் சாட்சியமாகக் கையொப்பமிடு வதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்து தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்